(கு.வி.மு.ச.அத்தியாயம் XXIII)

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இராதாபுரம்

| | |
|---|---|
| ஆண்டுப்பட்டிகை<br>பல்வகை<br>முதன்மைப் பதிவேடு<br>அமர்வு | CC.No.1534/2020 |

அரசுதரப்புக்காக சாட்சியின் சான்றுரைகள் PW– 8

| | | |
|---|---|---|
| பெயர் | : | வினுகுமார் |
| த/பெ | : | திருநீலகண்டன் |
| கிராமம் | : | மார்த்தாண்டத்தம் |
| வட்டம் | : | விளவன்கோடு |
| வயது | : | 37 |

**( எதிரி ஆஜர்)**

2024 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13 ஆம் நாளன்று, 1969 ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–ன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**முதல் விசாரணை :–**

1) நான் தற்போது பணகுடி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். இதற்கு முன்பு இராதாபுரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி செய்த போது கடந்த 02–10–2019 ம் தேதி இராதாபுரம் காவல் நிலைய தலைமை காவலர் மணி என்பவர் பதிவு செய்த நிலைய குற்ற எண்.179/2019 இதச சட்டப்பிரிவுகள் 294(பி), 323, 506(2) வழக்கு கோப்பை நான் விசாரணைக்கு எடுத்து கொண்டு 02–10–2019 ம் தேதி 19.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் மாடசாமி, லெட்சமணன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை டார்ச்லைட் வெளிச்சத்தில் பார்வையிட்டு பார்வைமகஜர் மாதிரி வரைபடம் தயார் செய்து வாக்குமூலம் பதிவு

செய்தேன் **பார்வைமகஜர் மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 4,5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2) பின்னர் சாட்சிகள் 1 முதல் 6 மற்றும் வழக்கு பதிவு செய்த காவலர் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி விசாரணையில் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரியை தேடி வந்த நிலையில் 03-10-2019 ம் தேதி 16.30 மணிக்கு ஈனன் குடியிருப்பு பஸ் ஸ்டாப் அருகே வைத்து எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

3) வழக்கின் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர். திருமதி.காந்திமதி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். காயம் பட்ட நபருக்கு சாதாரண காயம் என சான்று வழங்கினார்.

5) நான் வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீதான குற்றம் உண்மை என தெரிய வந்ததால் எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(பி), 323, 506(2) சட்டத்தின் கீழ் குற்ற இறுதி அறிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> – இல்லை

(ஒம்.)திரு.மு.ஆனந்த்,பி.ஏ.,பி.எல்.,

மாவட்ட உரிமையியல் (ம)

குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,

இராதாபுரம்.